Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, ஆகஸ்ட் 04, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 21

## தமிழக மாநகர பஸ்களில் ஆண்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ.5 என இருக்கும் நிலையில், ரூ.10 வசூலிக்கப்படுவதாக அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்

சென்னை ஆகஸ்ட் 04 2021: தமிழக மாநகர பஸ்களில் ஆண்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ.5 என இருக்கும் நிலையில், ரூ.10 வசூலிக்கப்படுவதாக அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம்சாட்டி இருந்தார்.

அதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் ராஜகண்ணப்பன் கூறியதாவது: அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் சொல்வது போல அரசு பஸ்களில் ஆண்களுக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கவில்லை. ஒரே ஒரு இடத்தில் கூடுதல் கட்டணம் வசூலித்த நடத்துநர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓ.பன்னீர்செல்வம் பொதுவாக குற்றம் சாட்டக்கூடாது.

சாதாரண நகரப் பேருந்துகளில் இதுவரை 6 கோடியே 53 லட்சம் மகளிர் இலவச பயணம் செய்துள்ளனர். நண்பரான திருமாவளவன் அவராகவே பிளாஸ்டிக் சேரில் அமர்ந்தார். இதை பெரிதுபடுத்த அவசியமில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



## இந்தியாவில் ஸ்புட்னிக்-வி தடுப்பூசி தயாரிப்பு செப்டம்பர் மாதத்தில் இந்தியாவில் துவங்கும்

ஐதராபாத், ஆக. 04 2021: இந்தியாவில் ஸ்புட்னிக்-வி தடுப்பூசி தயாரிப்பு செப்டம்பர் மாதத்தில் இந்தியாவில் துவங்கும் எனவும் அக்டோபரில் கிடைக்கும் எனவும் ரெட்டீஸ் லேபரட்டரி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா பாதிப்புகள் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் கோவிஷீல்டு, கோவாக்சின் ஆகிய தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. இந்நிலையில், இவை தவிர ரஷ்யாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசிக்கும் இந்தியாவில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இந்த தடுப்பூசியை தயாரிக்க டாக்டர் ரெட்டிஸ் லேப்ரட்டரி அனுமதி பெற்றுள்ளது.

அக்டோபரில் கிடைக்கும் இந்நிலையில், இதன் தயாரிப்பு செப்டம்பர் மாதத்தில் இந்தியாவில் துவங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஸ்புட்னிக்-வி தடுப்பூசி அக்டோபரில் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




தற்போது, ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஸ்புட்னிக்ஃவி தடுப்பூசி, இந்தியாவில் சுமார் 80 நகரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் நாடு முழுவதும் உள்ள சுமார் 300 மருத்துவமனைகளுக்கு தொடர்பு கொண்டு விநியோகித்து வருவதாகவும் டாக்டர் ரெட்டிஸ் லேப்ரட்டரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com



திருப்பூர் : திருப்பூர் வடக்கு மாவட்டம் எம் எஸ் நகர் மண்டல் ஒபிசி அணியின் சார்பாக தீரன் சின்னமலை நினைவு நாளையொட்டி அவரது திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் செந்தில்வேல் வழிகாட்டுதலின் படியும் மண்டல் தலைவர் வேலுச்சாமி தலைமையிலும் மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி இந்திரா நாகநாதன் ஒபிசி அணியின் மாவட்ட பொது செயலாளர் தீபா மோகன் முன்னிலையிலும் மண்டல் பொது செயலாளர் பத்மா நாதன் பாலு ஒபிசி அணியின் மண்டல் தலைவர் முருகன் ஒபிசி அணியின் மண்டல் பொது செயலாளர் பழனியப்பன் மற்றும் மாவட்ட மண்டல் அணி பிரிவு தலைவர்களும் நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இடம் எம் எஸ் நகர்

## பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதை எதிர்த்து, நாடாளுமன்றத்துக்கு 17 எம்.பி.களுடன் ராகுல்காந்தி

டெல்லி, ஆக. 04 2021: பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதை எதிர்த்து, நாடாளுமன்றத்துக்கு 17 எம்.பி.களுடன் ராகுல்காந்தி சைக்கிள் ஓட்டி வந்துள்ளார்.

கொரோனாவுக்கு அடுத்தப்படியாக நாட்டின் தலையாய பிரச்சினையாக பெட்ரோல், டீசல் விலை உயர்வு உருவெடுத்திருக்கிறது. கொரோனா ஊரடங்கு காலத்தில் மக்கள் வருவாய் இன்றி தவித்து வரும் வேளையிலும், பெட்ரோல், டீசல் இந்தளவிற்கு ஏன் விலை ஏறிக்கொண்டிருக்கிறது என தெரியாமல், மக்கள் விழி பிதுங்கி நிற்கின்றனர். இதனால் பாரதீய ஜனதா அரசின் மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்.

அதே போல விலையேற்றத்துக்கு எதிராக, எதிர்க்கட்சிகள் கொந்தளித்து போராட்டம் நடத்தும் போது, சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் விலையேற்றம் செய்வதாகவும், டிமாண்ட் செய்வதாகவும் பாரதீய ஜனதா அரசு விளக்கம் கூறுகிறது. ஆனால், அதற்கு விதிக்கப்படும் வரி, கூடுதல் வரிகள் குறித்து மட்டும் வாய் திறப்பதில்லை.



இந்நிலையில், எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து, சட்டப்பேரவை உறுப்பினர்களும் மக்களவை உறுப்பினர்களும் சட்டங்கள் இயற்றும் சட்டப்பேரவைகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் மாட்டு வண்டி, சைக்கிள் போன்ற வாகனங்களில் வந்து தங்களது எதிர்ப்பை பதிவு செய்துவருகின்றனர்.

அந்த வகையில் இன்று நாடாளுமன்றத்திற்கு காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி உள்ளிட்ட 17 எதிர்க்கட்சி எம்பிக்கள் பெட்ரோல் விலை உயர்வைக் கண்டிக்கும் விதமாக, சைக்கிளில் பேரணி வந்தனர். கடந்த வாரம் ராகுல் காந்தி வேளாண் சட்டங்களை எதிர்க்கும் வகையில் டிராக்டருடன் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து குறிப்பிடத்தக்கது.

## கோவை சாய்பாபாகாலனி, அழகேசன் சாலையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வெல்னெஸ் எனும் பிரத்யேக உடற்பயிற்சி மையம் துவங்கப்பட்டது

கோவை ஆகஸ்ட் 04, 2021: உடலை ஆரோக்கியம் மற்றும் கட்டுக்கோப்பாக வைப்பதில் உடற்பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. இந்நிலையில் கடந்த பதனெட்டு ஆண்டுகளாக பிரபல பிசியோதெரபிஸ்டாக இருந்து வரும் திருமதி. கலைவாணி கோவை சாய்பாபாகாலனி பகுதி அழகேசன் சாலையில் கோ ஆப்டெக்ஸ் அருகில் வெல்னெஸ் உடற்பயிற்சி மையத்தை கடந்த பத்து ஆண்டுகளாக நடத்தி வருகின்றார்.இந்நிலையில் மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப பல்வேறு நவீன வகை உடற்பயிற்சி உபகரணங்களுடன் புதுப்பிக்கப்பட்ட வெல்னெஸ் உடற்பயிற்சி ஸ்டுடியோ துவக்க விழா நடைபெற்றது.கலைவாணி ,ரவி,மற்றும் பங்குதாரர் உடற்பயிற்சி ஆலோசகர் கவுதம் கென்னடி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இதற்கான துவக்க விழாவில் வெல்னெஸ் உடற்பயிற்சி மைய குழுவினர் இணைந்து திறந்து வைத்தனர். இந்த நவீன உடற்பயிற்சி மையத்தில்,ஆண்கள் மற்றும் பெண்கள் உடற்பயிற்சி செய்வதற்கான நவீன வகை உபகரணங்கள், எடை குறைப்பு கருவிகள்,மற்றும் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் பிரத்யேக பயிற்சி முறைகள்,உலகத்தரம் வாய்ந்த பிசியோதெரபி கருவிகள் என அனைத்தும் ஒரே இடத்தில் அமையபெற்ற மையமாக வெல்னெஸ் ஸ்டுடியோ அமைந்துள்ளது.இது குறித்து இதன் வெல்னெஸ் ஸ்டுடியோ நிறுவனரான கலைவாணி கூறுகையில்,தற்போதைய சூழலில் உடற்பயிற்சி முக்கிய தேவையாக இருப்பதால் இந்த மையத்தை துவக்கி உள்ளதாகவும்,குறிப்பாக இங்கு



பிசியோதெரபி பயிற்சிகள் சிறந்த முறையில் தேர்ந்த பயிற்சியாளர்களை கொண்டு வழங்க இருப்பதாகவும், மேலும் ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் இங்கு பயிற்சி செய்யும் வகையில் இருந்தாலும்,பெண்களுக்கென தனியாக காலை முதல் மதியம் வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.குறிப்பாக விளையாட்டு துறையில் சாதிக்க விரும்புவர்களுக்கு சிறப்பு சலுகைகளும் இந்த பயிற்சி மையத்தில் வழங்க உள்ளதாகவும் பங்குதாரர் கவுதம் கென்னடி தெரிவித்துள்ளார்.

## அந்தமான்- நிக்கோபார் தீவுகளில் இன்று காலையில் 6.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

போரட்பிளேயர், ஆக. 04 2021: அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இன்று காலை நடுத்தர மற்றும் சக்திவாய்ந்த இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

அந்தமான்- நிக்கோபார் தீவுகளில் இன்று காலையில் 6.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. என்சிஎஸ் படி, காலை 6:27 மணிக்கு போர்ட் பிளேயரில் ஏற்கனவே 4.3 ரிக்டர் அளவில் நில அதிர்வு உணரப்பட்டது. அதனைத் தொடர்ந்து மீண்டும் சக்தி வாய்ந்த இரண்டாவது நிலநடுக்கம் ஒரு மணி நேரம் கழித்து சுமார் 7.30 மணி அளவில் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இந்த இரண்டு நிலநடுக்கங்களால் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் தீரன் சின்னமலையின் 216 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னமலை ஆகஸ்ட் 04, 2021: மாவீரன் தீரன் சின்னமலையின் 216 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை சார்பாக மாநகர் மாவட்டம் தலைமை அலுவலகம் பல்லடம் ரோட்டில் அவரது திருவுருவ படத்திற்கு மாநகர செயலாளர் துரை தண்டபாணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்பு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது . இதில் மாநகர தலைவர் அஜய் முன்னிலை வகித்தார்.மற்றும் முன்னணி நிர்வாகிகள் இயக்க உறவுகள் சமூக இடைவெளியை



பின்பற்றி கலந்து கொண்டனர்.

## நாடு முழுதும் 24 போலி பல்கலை கழகங்கள் இயங்கி வருவதுயு.ஜி.சி. எனப்படும் பல்கலை கழக மானியக்குழுவால்கண்டறியப்பட்டு உள்ளது

புதுடெல்லி, ஆக. 04 2021: இந்தியாவில் 24 போலி பல்கலைக்கழகங்கள் இயங்கி வருவது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த ஜூலை 19ந்தேதி தொடங்கி நடந்து வருகிறது. கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்து, பெகாசஸ் விவகாரம், பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்வு, விவசாயிகள் போராட்டம் என பல்வேறு விவகாரங்கள் எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்டன.

இதனால் அவை நடவடிக்கைகள் தொடர்ந்து பாதிப்படைந்த நிலையில், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மக்களவையில் நேற்று அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதில் ஒன்றில், மாணவர், பெற்றோர், பொதுமக்கள் மற்றும் ஊடகங்களில் வந்த புகார்களின் அடிப்படையில், நாடு முழுதும் 24 போலி பல்கலை கழகங்கள் இயங்கி வருவது யு.ஜி.சி. எனப்படும் பல்கலை கழக மானியக்குழுவால் கண்டறியப்பட்டு உள்ளது.

யு.ஜி.சி.யின் முறையான அனுமதி பெறாமல் இயங்கி வரும் மேலும் 2 பல்கலை கழகங்கள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. இதுதவிர, உத்தர பிரதேசத்தில் அதிகபட்சமாக 8 பல்கலைக்கழகங்கள், டெல்லியில் 7 பல்கலைக்கழகங்கள், ஒடிசா மற்றும் மேற்கு வங்காளத்தில் தலா 2 பல்கலைக்கழகங்கள்,





புதுச்சேரி உட்பட 5 மாநிலங்களில் தலா ஒரு போலி பல்கலைக்கழகங்கள் என மொத்தம் 24 போலி பல்கலைக்கழகங்கள் உள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த போலி பல்கலைக்கழகங்கள் மீது விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அளித்துள்ள பதிலில் தெரிவித்து உள்ளார்.

## சோழவந்தான் பேரூராட்சி சார்பில் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது

சோழவந்தான் ஆகஸ்ட் 04, 2021: தமிழக அரசின் வழிகாட்டுதலின் படி பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை மாவட்டம் சோழவந்தான் பேரூராட்சி சார்பாக பரதாலயா கலைக்குழுவினரால் கொரோனா விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோவில் அருகில், வட்டப்பிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம். அருகில், பேட்டை பகுதியில், மந்தை களத்தில், மேலப்பச்சேரி பகுதியில் உள்ளிட்ட ஐந்து இடங்களில் நடத்தப்பட்டது. செயல் அலுவலர் தலைமையில் சோழவந்தான் காவல் ஆய்வாளர் முன்னிலையில் தூய்மை பணியாளர்களை கொண்டு கொரோனா விழிப்புணர்வு பேரணி ஜெனகை மாரியம்மன் கோவிலிலிருந்து கடை வீதி வழியாக பேரூராட்சி அலுவலகம் வரை நடத்தப்பட்டது. சிறிய கடைகள், வணிக வளாகங்கள், மற்றும் பேருந்து நிறுத்தங்களில் செயல் அலுவலர் கொரோனா விழிப்புணர்வு குறித்த துண்டு



பிரசுரங்கள் வழங்கினார். வணிக நிறுவனங்களில் முக கவசம் மற்றும் சமூக இடைவெளி குறித்த நோட்டீஸ் ஒட்டப்பட்டது. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் திலீபன் சக்ரவர்த்தி மற்றும் வினோத் குமார். இளநிலை உதவியாளர்கள் முத்துக்குமார் கல்யாணசுந்தரம் மற்றும் பணியாளர்கள் சோனை பூவலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மெய்நிகர் நடைமுறைக்கான இந்தியாவின் முதல் கூட்டமைப்பை தொடங்கியது சென்னை ஐஐடி

சென்னை, ஆகஸ்ட் 04, 2021: 'இந்தியாவில் இன்ஜினியரிங் திட்டத்துக்கான கூட்டமைப்பு' என்றழைக்கப்படும், மெய்நிகர் நடைமுறைக்கான நாட்டின் முதல் கூட்டமைப்பை சென்னை ஐஐடி தொடங்கியுள்ளது. கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் அரசு அமைப்புகள் ஆகியவற்றின் ஒரு குழுவாக, இந்த கூட்டமைப்பு சென்னை ஐஐடி-யால் ஒருங்கிணைக்கப்படுகிறது. மெய்நிகர் நடைமுறை அதிகரிக்கப்பட்ட நடைமுறை கலப்பு நடைமுறை மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு ஆகியவற்றில் உறுப்பினர்கள் புதிய மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் பயன்பாடுகளை உருவாக்க வைப்பதுதான் இந்த கூட்டமைப்பின் முக்கிய நோக்கம். இதன் மூலம் தொழில்துறை ஆதரவாளர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆகியவற்றின் பங்களிப்புடன் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். அனைத்து தரப்பினர், அரசு கொள்கை திட்ட வகுப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் சிறந்த நடைமுறைகள், பேச்சுவார்த்தையை இந்த கூட்டமைப்பு ஊக்குவிக்கும். இது மெய்நிகர், அதிகரிக்கப்பட்ட மற்றும் கலப்பு நடைமுறையில் ஆர்வமுள்ள தொழிற்துறை, கல்வி நிறுவனங்கள், நுகர்வோர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஒரு ஆதாரமாக மாற திட்டமிட்டுள்ளது. இந்த கூட்டமைப்பில் சென்னை ஐஐடி முக்கிய பங்காற்றுவதை சுட்டிக் காட்டிய 'கேவ்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சென்னை ஐஐடியின் அப்ளைட் மெக்கானிக்ஸ் துறை பேராசிரியர் எம். மணிவண்ணன் கூறுகையில், "நீட்டிக்கப்பட்ட நடைமுறை எக்ஸ் ஆர் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டில் புத்தாக்கங்களுக்கு சென்னை ஐஐடி போன்ற வலுவான ஆராய்ச்சி குழு தேவைப்படுகிறது. கல்வி நிறுவனத்தால் தொடங்கப்பட்ட கூட்டமைப்பாக, இது புத்தாக்கத்துக்கு முன்னுரிமை அளிக்கிறது, ஒவ்வொரு உறுப்பினருக்கும் அதிக வசதிகள் உள்ளது மற்றும் அனைவரும் ஒன்றாக, பரந்த பார்வையாளர்களை சென்றடைய முடியும் மற்றும் மிகப் பெரிய பணிகளையும் சாதிக்க முடியும்" என்றார். . 'கேவ்' அமைப்பு இந்தியாவுக்கு எவ்வாறு பயனளிக்கும் என்பது பற்றி விவரித்த பேராசிரியர் மணிவண்ணன் கூறுகையில், "மேக் இன் இந்தியா யுகத்தில், நீட்டிக்கப்பட்ட நடைமுறை மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டுக்கான இந்திய கூட்டமைப்பு, மிக பெரியவற்றை கண்டறிய முக்கியமானது" என்றார். புகழ்பெற்ற நிறுவனத்தை உருவாக்கும் திட்டத்தின் கீழ் சென்னை ஐஐடியில், மெய்நிகர் நடைமுறை மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுக்கான சீர்மிகு மையத்தால் சமீபத்தில் நடத்தப்பட்ட இணையகருத்தரங்கில், 'கேவ்' கூட்டமைப்பை தமிழக அரசின் தொழில்நுட்பத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் நீரஜ் மிட்டல் தொடங்கி வைத்தார். இதன் துவக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய டாக்டர் நீரஜ் மிட்டல் கூறுகையில், "அனுபவத்தை பொதுவானதாக மாற்ற, இந்தியா போன்ற நாட்டுக்கு, இதுபோன்ற கூட்டமைப்பு மிகவும் அவசியம் என்றார். சீர்மிகு மையத்தை நிதி ஆயோக் அமைப்பின் அடல் புத்தாக்க திட்ட இயக்குனர் டாக்டர் சிந்தன் வைஷ்ணவ் தொடங்கி வைத்தார். இந்தியாவின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மெய்நிகர் நடை முறை அதிகரிக்கப்பட்ட நடைமுறை ஆகியவற்றில் பல்வேறு முயற்சிகளை கொண்டு வர இந்த மையம் முக்கியமானதாக இருக்கும். இந்திய இளைஞர்களின் திறனை வளர்த்தல், குறிப்பாக எதிர்கால தூண்களாக விளங்கும் குழந்தைகள் உள்ளூர் மொழிகளில் சிறப்பாக கற்பதற்கு இந்த மையம் எப்படி உதவியாக இருக்கும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

# கால் விரல்களால் தேர்வு எழுதிய 12-ம் வகுப்பு மாணவன் துஷார் தேர்வில் 70% மதிப்பெண்களை பெற்று சாதனை

லக்னோ, ஆக. 04 2021: உத்திரபிரதேசம் மாநிலம், லக்னோவில், துஷார் என்ற மாணவன், கால் விரல்களால் தேர்வு எழுதி 12-ம் வகுப்பு தேர்வில் 70% மதிப்பெண்களை பெற்றுள்ளார்.

உத்திரபிரதேசம் மாநிலம், லக்னோவில், துஷார் என்ற மாணவனுக்கு, பிறந்ததிலிருந்தே இரண்டு கைகளும் செயல்படவில்லை. இந்நிலையில், துஷார், 12-ம் வகுப்பில், தனது கால் விரல்களால், தேர்வெழுதி 70% மதிப்பெண்களை பெற்றுள்ளார்.

இதுகுறித்து, துஷார் கூறுகையில், பிறந்ததிலிருந்து என் இரண்டு கைகளும் செயல்படவில்லை. ஆனால் நான் அதை ஒரு குறைபாடாக ஒருபோதும் கருதவில்லை. நான் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று என் பெற்றோரிடம் கேட்டேன். ஆனால் நான் எப்படி எழுதுவது என்பது தடையாக இருந்தது. என் உடன்பிறப்புகள் படிக்கும்போது, நான் என் கால்விரல்களை என் கைகளாக மாற்றி எழுத ஆரம்பித்தேன் என தெரிவித்துள்ளார்.



மேலும் அவர் கூறுகையில், நான் எனது கால்விரல்களால் தேர்வுகளை எழுதும் போது, விடைத்தாள்களை அழகாக காண்பிக்க, கருப்பு மற்றும் நீல பேனாக்களை பயன்படுத்தி எழுதினேன். கால் விரல்களால் என் புத்தகங்களில் பக்கங்களையும் என்னால் திருப்ப முடியும் என்று கூறி உள்ளார்.

மேலும் தன்னை ஆதரித்த ஆசிரியர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ள மாணவர், ஆசிரியர்கள் என்னை தரையில் அமர்ந்து தேர்வுகளை எழுத அனுமதித்தனர். எனது மதிப்பெண்களை குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் பத்தாம் வகுப்பில் 67 சதவீத மதிப்பெண்களைப் பெற்றேன். தற்போது நான் பனிரெண்டாம் வகுப்பு 70 சதவீத மதிப்பெண்களைப் பெற்று உள்ளேன் என தெரிவித்துள்ளார்.

# மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் பாதுகாப்புத் துறையில் தன்னிறைவை ஊக்கப்படுத்துவதற்காக அரசு ஏராளமான கொள்கைகளையும், சீர்திருத்தங்களையும் மேற்கொண்டுள்ளது: மத்திய பாதுகாப்பு இணை அமைச்சர் அஜய் பட்

புதுதில்லி, ஆகஸ்ட் 04, 2021: மத்திய பாதுகாப்பு இணை அமைச்சர் அஜய் பட், கீழ்க்காணும் தகவல்களை மாநிலங்களவையில் இன்று எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ள உபகரணங்கள்: கடந்த சில ஆண்டுகளில் மேக் இன் இந்தியா முன்முயற்சியின் கீழ் 'தனுஷ்' பீரங்கி, பாலம் அமைக்கும் டாங்கி, 'தேஜாஸ்' இலகுரக விமானம், 'ஆகாஷ்' ஏவுகணை, 'ஐஎன்எஸ் கல்வாரி' நீர்மூழ்கிக் கப்பல், கண்காணிப்புக் கப்பல்கள், ஐஎன்எஸ் சென்னை, ஐஎன்எஸ் கந்தேரி உள்ளிட்ட ஏராளமான குறிப்பிடத்தக்க திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உரிமம் மூலம் நாடு முழுவதும் தனியார் துறையினர் பாதுகாப்பு துறையில் பங்கு பெறுவதற்கு தற்போது வாய்ப்பு வழங்கப்படுகிறது. தற்போது பிகார் மாநிலத்தின் நாளந்தாவில் ஆயுத தொழிற்சாலை இயங்குகிறது.

ஆயுதத் தொழிற்சாலை ஊழியர்களின் நலன் பாதுகாப்பு: ஆயுதத் தொழிற்சாலை வாரியம் நிறுவனமயமாக்கப்பட்ட பிறகு, அதன் ஊழியர்களின் நலனைப் பாதுகாப்பதில் அரசு உறுதிப் பூண்டுள்ளது. இதன்படி, ஏ, பி மற்றும் சி பிரிவு ஊழியர்கள், புதிதாக உருவாக்கப்படும் பொதுத்துறை நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுவர். அவர்களது நியமன தேதியிலிருந்து 2 ஆண்டுகளுக்கு அயற்பணியில் அதற்கான படித் தொகையின்றி பணியாற்ற வேண்டும். ஊழியர்கள் அனைவரும், பாதுகாப்பு உற்பத்தி துறையின் கீழ் உருவாக்கப்படவுள்ள ஆயுதத் தொழிற்சாலை இயக்குனரகத்திற்கு மாற்றப்படுவர். அதுவரையில், அவர்களுக்கு மத்திய அரசின் ஊழியர்களுக்கான அனைத்து விதிமுறைகளும் பொருந்தும். அதன்படியே சம்பளம், படி, விடுமுறை, ஒய்வூதிய பலன்கள் இருக்கும். ஓய்வு பெற்றவர்கள் மற்றும் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் ஓய்வூதியத்தை அரசே தொடர்ந்து ஏற்கும்.

ஆயுதப் படைகளுக்கு நவீன தொழில்நுட்பம்: பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டிஆர்டிஓ உருவாக்கிய அதிநவீன தளங்கள், ஆயுதங்கள் மற்றும் உணரிகள், ஆயுதப் படைகளுக்கு தொழில்நுட்ப உதவியை அளிக்கவும் திறனை மேம்படுத்தவும் பயன்படுகிறது. ஏவுகணை அமைப்புகள், வான்வழி முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு, போர் விமானங்கள், பீரங்கி துப்பாக்கிகள் மற்றும் ராக்கெட்டுகள், சிறிய ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள், தொலை தூர ரேடார்கள், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அமைப்பு முறைகள் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பத் துறைகளில் உபகரணங்கள்/ அமைப்பு முறைகளை மேம்படுத்துவதற்காக டிஆர்டிஓ திட்டங்களை மேற்கொண்டுள்ளது. பாதுகாப்பு சேவைகளை நவீனமயமாக்குவதற்காக கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூடுதலாக 23.78% நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள்: பாதுகாப்புத் துறையில் தற்சார்பை ஊக்குவிப்பதற்காக ஏராளமான கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் அரசு மேற்கொண்டுள்ளது. பாதுகாப்பு உபகரணங்களின் உள்நாட்டு வடிவமைப்பு, தயாரிப்பு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதே இந்த முயற்சிகளின் நோக்கமாகும். இதன் மூலம் இறக்குமதி மீதான சார்பும் வெகுவாகக் குறையும். மூலதன கொள்முதலுக்காக நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையான ரூ. 1,11,463.21 கோடியில் ரூ. 71,438.36 கோடியை உள்நாட்டு மூலதன கொள்முதலுக்குப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்து நிதியாண்டுகள் மற்றும் தற்போதைய நிதியாண்டில் ஆயுத படைகளுக்கான பாதுகாப்பு உபகரணங்களை கொள்முதல் செய்வதற்காக கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் 60% இந்தியர்களிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் பாதுகாப்பு பொருட்களின் தயாரிப்பு: கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மற்றும் நடப்பு மே மாதத்தில் முறையே 101 மற்றும் 108 பொருட்கள் அடங்கிய இரண்டு நேர்மறையான உள்ளூர்மயமாக்கல் பட்டியல்களை (முந்தைய எதிர்மறை பட்டியல்கள்) மத்திய அரசு அறிவித்தது. இந்த பொருட்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள காலத்திற்குப் பிறகு இவற்றை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்திய ஆயுதப் படைகளின் தேவையை பூர்த்தி செய்ய உள்நாட்டிலேயே இந்தப் பொருட்களை தயாரிக்க இதன்மூலம் இந்திய பாதுகாப்பு தொழில்துறைக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்தப் பொருட்களின் இறக்குமதிக்கான தடைக்காலம் 2020 டிசம்பர் முதல் 2025 டிசம்பர் வரை பரவியுள்ளது. மாதிரிகளின் வடிவமைப்பு மற்றும் தயாரிப்பிற்கு இரண்டு அல்லது அதற்குப் மேற்பட்ட ஆண்டுகள் தேவைப்படும் என்பதால், அந்நிய பரிமாற்றம் மீதான சேமிப்பு மற்றும் வேலைவாய்ப்பு குறித்த மதிப்பீட்டை தற்போதைய நிலையில் மேற்கொள்ள இயலாது.

கொவிட்-19 தொற்றை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள்: தேசிய அளவில் கொவிட்-19 தொற்றை எதிர்கொள்வதற்காக டிஆர்டிஓ ஏராளமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தொழில்நுட்பம் சார்ந்த புரிதல் குறைவாக இருந்த காலகட்டத்திலும், பற்றாக்குறை நிலவிய போதும், கிருமிநாசினிகள், என்95, என்99 போன்ற முகக்கவசங்கள், முழு உடல் கவச உடைகள் உள்ளிட்டவற்றை டிஆர்டிஓ உருவாக்கி, இந்த தொழில்நுட்பங்கள் ஏராளமான தொழில் துறைகளுக்கு இலவசமாக மாற்றித் தரப்பட்டது. தில்லி, பிகார், உத்தராகண்ட், ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட மாநிலங்களில் தற்காலிக கொவிட்-19 மருத்துவமனைகளை இந்த அமைப்பு நிறுவியது. தேசிய அளவில் கொவிட்-19 பரிசோதனையை அதிகரிக்கும் முயற்சிகளிலும் டிஆர்டிஓ தேவையான ஆதரவை அளித்தது. பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு 2-டிஜி என்ற சிகிச்சை முறையை டிஆர்டிஓ உருவாக்கியுள்ளது. பிஎம் கேர்ஸ் நிதி அறக்கட்டளையின் கீழ் நாடு முழுவதும் டிஆர்டிஓ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட 866 மருத்துவப் பிராணவாயு ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. தனிநபரின் எஸ்பிஓ2 அளவை உணர்ந்து அதற்கு தகுந்தவாறு பிராணவாயுவை விநியோகிக்கும் தனித்துவம் வாய்ந்த அமைப்பு முறையான ஆக்ஸிகேரை டிஆர்டிஓ உருவாக்கியுள்ளது. விமானப் படையை நவீனமயமாக்கல்: உள்ளூர்மயமாக்கல், தரம் உயர்த்த மற்றும் ஒருங்கிணைத்தல் உள்ளிட்டவை அடங்கிய பல்முனை அணுகுமுறைகளுடன் விமானப்படையை நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய ஆயுதங்கள், மேம்பட்ட விமானங்கள், வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் துல்லியமான திட்டமிடும் அணுகுமுறை, இந்திய விமானப்படையை நவீன இணைப்பை மையமாகக் கொண்ட படையாக மாற்றியுள்ளது.

# கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் அல்லது காப்பாளர்களையோ அல்லது தத்தெடுத்த பெற்றோர் இருவரையும் அல்லது உயிருடன் இருக்கும் ஒரே பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவ திட்டம்

புதுதில்லி, ஆகஸ்ட் 04, 2021: கொரோனா தொற்று காரணமாக மார்ச் 11 2021 முதல் பெற்றோர் இருவரையும் அல்லது காப்பாளர்கள் இருவரையும் அல்லது தத்தெடுத்த பெற்றோர் இருவரையும் அல்லது உயிருடன் இருக்கும் ஒரே பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவுவதற்காக பிரதமர் திரு.நரேந்திர மோடி மே 29 2021 அன்று குழந்தைகள் திட்டத்துக்கு பிஎம் கேர்ஸ் நிதியைப் பயன்படுத்தும் திட்டத்தை தொடங்கி வைத்தார். குழந்தைகளுக்கு முழுமையான அக்கறை அளிக்கவும், குழந்தைகள் நீடித்த காலத்துக்கு பாதுகாப்பு பெறவும், உடல் நலத்தைக் காக்க மருத்துவ காப்பீடு வசதி பெறவும், கல்வி மூலம் அதிகாரம் அடையவும், தற்சார்பு பெறுவதையும் உறுதி செய்ய அவர்களது 23 ஆவது வயது வரை இத்திட்டம் உதவுகிறது, பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி துறை இந்த திட்டத்தை தேசிய அளவில் செயல்படுத்தும், மாநிலங்களில் சிறார்களின் நீதி உள்ளிட்டவற்றை கையாளும் துறைகள் மாநில அளவில் இதனை செயல்படுத்தும் அமைப்புகளாக இருக்கும். இத்திட்டத்தை https://pmcaresforchildren.in/ என்ற இணையதளம் வாயிலாக அணுக முடியும். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இது கடந்த ஜூலை 15 2021 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, தகுதியுடைய குழந்தைகளை அடையாளம் காணுமாறு மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு தகுதியுடைய குழந்தைகள் குறித்து நாட்டில் உள்ள எந்த குடிமக்களும் இந்த இணையதளம் வாயிலாகத் தகவலைத் தெரிவிக்கலாம்.

# ஆன்லைன் கல்வி முறையில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசின் நடவடிக்கைகள், செம்மொழி தமிழ் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள்

புதுதில்லி, ஆகஸ்ட் 04, 2021: நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்விகளுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கீழ்காணும் தகவல்களை அளித்தார். மாணவர்களிடையே பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான டிஜிட்டல் பழக்கவழக்கங்களை உறுதி செய்வதற்காக 'சைபர் பாதுகாப்பு கையேட்டை' சிபிஎஸ்இ வெளியிட்டுள்ளது. சைபர் பாதுகாப்பு, ஆன்லைன் சிக்கல்கள், மிரட்டல்கள், அவதூறு, மனரீதியான கொடுமை, ஆன்லைன் பாலியல் கொடுமை, மோசடிகள் உள்ளிட்ட தலைப்புகளை கொண்ட கையேடு http://cbseacademic.nic.in எனும் தளத்தில் கிடைக்கும். மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய கணினி அவசரகால எதிர்வினை குழு (செர்ட்-இன்), காணொலி செயலிகளின் பாதுகாப்பு கவலைகளை கையாள்வதற்கான கையேட்டை தயாரித்துள்ளது. https://www.cert-in.org.in எனும் இணைப்பில் அதை காணலாம்.

மாணவர்களுக்கான தொழில் / பணி வழிகாட்டுதலுக்காக ஆசிரியர்களின் திறனை வளர்க்கும் இரண்டு நாள் நிகழ்ச்சியை சிபிஎஸ்இ ஏற்பாடு செய்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்களது பள்ளிகளில் உள்ள மூத்த மாணவர்களுக்கு வழிகாட்டுவார்கள். கேந்திரிய வித்யாலயாக்களில் மனநல ஆலோசகர்கள் மூலமும், ஜவகர் நவோதயா பள்ளிகளில் மனநல ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மற்றும் துணை முதல்வர்கள் மூலம் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

மாணவர்களுக்கான பல்வேறு சேவைகளை தேசிய கல்வி உதவித்தொகை தளம் வழங்குகிறது. லீமீமீஜீவ://வநீலீஷீநீணீகூஷீவ லீவீஜீவ.ரீஷீஸ்.வீஸீ என்பது அதன் இணையதள முகவரி ஆகும். கடந்த ஐந்து வருடங்களில், ஐந்து திறன் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை: ஸ்ரீ விஸ்வகர்மா திறன் பல்கலைக்கழகம், குருகிராம், ஹரியானா; சிம்பயாசிஸ் ஸ்கில்ஸ் அண்டு புரொஃபெஷனல் பல்கலைக்கழகம், புனே, மகாராஷ்டிரா; பாரதிய திறன் வளர்த்தல் பல்கலைக்கழகம், ஜெய்ப்பூர், ராஜஸ்தான்; ராஜஸ்தான், ஐஎல்டி திறன் பல்கலைக்கழகம், ஜெய்ப்பூர், ராஜஸ்தான், மற்றும் தில்லி திறன் மற்றும் தொழில்முனைதல் பல்கலைக்கழகம், புது தில்லி ஆகும். திறன் சார்ந்த படிப்புகளை வழங்குவதற்காக பல்கலைக்கழக மானிய குழுவால் 2016-17-ம் ஆண்டு 425 கல்வி நிறுவனங்களுக்கும், 2017-18-ம் ஆண்டு 424 கல்வி நிறுவனங்களுக்கும், 2018-19-ம் ஆண்டு 624 கல்வி நிறுவனங்களுக்கும், 2019-20-ம் ஆண்டு 354 கல்வி நிறுவனங்களுக்கும், 2020-21-ம் ஆண்டு 1208 கல்வி நிறுவனங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. எட்டாவது பட்டியலின் கீழ் மொழிகளுக்கு ஊக்கமளிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. செம்மொழியாம் தமிழின் வளர்ச்சிக்காக சென்னையில் உள்ள தமிழ் செம்மொழி மத்திய நிறுவனம் செயல்படுகிறது. இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவனம், பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், மாநில அரசுகள் உள்ளிட்டவையோடு இணைந்து மொழிகளின் வளர்ச்சிக்காக பணியாற்றுகிறது. இதற்கிடையே, தேசிய கல்வி கொள்கை, 2000-ன் முதல் ஆண்டு நிறைவை ஒட்டி, பல்வேறு இணைய கருத்தரங்குகளை இந்திய அரசு நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பல்முனை மற்றும் முழுமையான கல்வி குறித்த தேசிய இணைய கருத்தரங்கை பல்கலைக்கழக மானிய குழு இன்று நடத்தியது. கல்வி அமைச்சகம் மற்றும் பல்கலைக்கழக மானிய குழுவின் மூத்த அதிகாரிகள் இதில் கலந்துக் கொண்டனர். இணைய கருத்தரங்கில் தொடக்கவுரை ஆற்றிய கல்வி இணை அமைச்சர் டாக்டர் சுபாஸ் சர்கார், தக்□ஷசீலம் மற்றும் நாளந்தா காலத்தில் இருந்தே நமது நாட்டில் முழுமையான மற்றும் பல்முனை கற்றலுக்கான நீண்ட பாரம்பரியம் இருப்பதாக கூறினார். இணைய கருத்தரங்கில் உரையாற்றிய உயர்கல்வி செயலாளர் திரு அமித் காரே, தேசிய கல்விக் கொள்கை, 2020-ன் உருவாக்கம் மற்றும் அடிப்படைகள் குறித்து பேசினார். தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில் தேசிய கல்வி கொள்கை கவனம் செலுத்துவதாக அவர் கூறினார்.

# நாட்டில் விளையாட்டுத்துறையை வளர்க்க பல திட்டங்கள்: மத்திய அமைச்சர் திரு அனுராக் தாகூர் தகவல்

புதுதில்லி, ஆகஸ்ட் 04, 2021: நாட்டில் விளையாட்டுத்துறையை வளர்க்க பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக, மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அனுராக் தாகூர் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் அவர் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது: கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் திறமையான விளையாட்டு வீரர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் மேம்பாட்டுக்காக, ஆண்டுக்கு ஒரு வீரருக்கு ரூ. 6.28 லட்சம் வழங்கப்படுகிறது. நாடு முழுவதும் 1000 கேலோ இந்தியா மையங்களை அமைக்க மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இவற்றில் 360 கேலோ இந்தியா மையங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் இதுவரை, 236 விளையாட்டு அகாடமிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. ஊரகப் பகுதிகள், பழங்குடியின பகுதிகள், பிற்படுத்தப்பட்ட பகுதிகள் உட்பட நாட்டில் கீழ்கண்ட திட்டங்களை மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் உருவாக்கியுள்ளது: 1. கேலோ இந்தியா திட்டம், 2. தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு உதவி 3. சர்வதேச விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு சிறப்பு விருதுகள் 4. தேசிய விளையாட்டு விருதுகள், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்; 5. பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் தேசிய விளையாட்டு நல நிதி; 6) தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதி; மற்றும் (7) இந்திய விளையாட்டு ஆணையம் மூலம் விளையாட்டு பயிற்சி மையங்களை இயக்குவது. இந்த திட்டங்கள் மூலம் பயனடைபவர்களில் பெரும்பாலானோர், ஊரக, பழங்குடியின மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை சேர்ந்தவர்கள். வீராங்கனைகளுக்கு அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் தங்குமிடம் வசதிகளுடன் வழக்கமான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தேசிய விளையாட்டு கல்வி வாரியத்தின் (NSEB) நோக்கம்: விளையாட்டுகளில் அதிகளவிலான பங்களிப்பை ஊக்குவித்தல்.

இளமையிலேயே விளையாட்டு வீரர்களின் திறமைகளை அடையாளம் கண்டு வளர்ப்பது. விளையாட்டுக்களால், கல்வியில் இழப்பு ஏற்பட வழிவகுக்காது என்ற உறுதியை விளையாட்டு துறையினருக்கும் பெற்றோர்களுக்கும் அளிப்பது. வேலைவாய்ப்புகளை அளிப்பது. முறையான வழியில் விளையாட்டு தொடர்பான மாற்று வேலை வாய்ப்புக்களை ஊக்குவித்தல். விளையாட்டு வீரர்களை தயார்படுத்துவதில் ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், மருத்துவ நிபுணர்கள், மனநல மருந்துவர்கள், உடற்கூறு பயிற்சியாளர்களை ஈடுபடுத்துதல். விளையாட்டில் ஆர்வத்தையும், பங்களிப்பை ஊக்குவிக்கும் சிறந்த வழிகளை உருவாக்குவதன் மூலம் விளையாட்டை மேம்படுத்துதல். அடிமட்டத்திலிருந்து, உயர் கல்வி வரை விளையாட்டை வளர்த்து, அதில் சிறந்து விளங்கும் வாய்ப்புகளை அளிப்பதுதான் தேசிய விளையாட்டு கல்விவாரியத்தின் நோக்கம்.

# சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை கொவிட் பாதிப்பில் இருந்து பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

புதுதில்லி, ஆகஸ்ட் 04, 2021: நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்விகளுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் திரு நாராயண் ராணே கீழ்காணும் தகவல்களை அளித்தார். ஐக்கிய நாடுகள் பொது சபையால் அறிவிக்கப்பட்ட சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூன் 27 அன்று கொண்டாடப்படுகிறது. கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக, அமைச்சகத்தால் நேரடி நிகழ்ச்சி நடத்தப்படவில்லை என்றாலும், நாட்டின் பொருளாதாரத்திற்கு சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆற்றும் பங்கை அங்கீகரிக்கும் விதத்தில் காணொலி மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை கொவிட் பாதிப்பில் இருந்து பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. அவற்றில் சில பின்வருமாறு: 1. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ 20,000 கோடி துணைக் கடன். 2. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட தொழில்களுக்கு ரூ 3 லட்சம் கோடி பிணையில்லா தானியங்கி கடன். 3. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தற்சார்பு இந்தியா நிதியின் மூலம் ரூ 50,000 கோடி ஈவுத்தொகை.

4. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் வகைப்பாட்டிற்கு புதிய திருத்தப்பட்ட விதிமுறைகள்.

5. வர்த்தகம் செய்வதை எளிதாக்குவதற்காக 'உதயம் பதிவு தளத்தின்' மூலம் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பதிவு. 6. ரூ 200 கோடி வரையிலான கொள்முதலுக்கு சர்வதேச ஒப்பந்தமுறை இல்லை.

பட்டியல் பிரிவு/ பழங்குடி தொழில் முனைவோருக்கு தொழில்முறை ஆதரவு அளிப்பதற்காக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனமான தேசிய சிறு தொழில்கள் நிறுவனம் மூலம் தேசிய பட்டியல் பிரிவு/ பழங்குடி மையம் செயல்படுத்தப்படுகிறது. இதன் வாயிலாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தேசிய பட்டியல் பிரிவு/ பழங்குடி மையத்தின் கீழ் 2018-19-ம் ஆண்டு ரூ 77.78 கோடியும், 2019-20-ம் ஆண்டு ரூ 79.65 கோடியும், 2020-21-ஆண்டு ரூ 120 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. பட்டியல் பிரிவு/ பழங்குடி சிறு மற்றும் குறு நிறுவனங்களிடம் இருந்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களால் 2017-18-ம் ஆண்டு ரூ 544.45 கோடி மதிப்புள்ள கொள்முதல்களும், 2018-19-ம் ஆண்டு ரூ 824.71 கோடி மதிப்புள்ள கொள்முதல்களும், 2019-20-ம் ஆண்டு ரூ 692.88 கோடி மதிப்புள்ள கொள்முதல்களும், 2020-21-ம் ஆண்டு ரூ 753.97 கோடி மதிப்புள்ள கொள்முதல்களும் செய்யப்பட்டுள்ளன. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சி சட்டம், 2006-ன் 18-ம் பிரிவின் 3-ம் துணைப் பிரிவு மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சி சட்டம், 2006-ன் 18-ம் பிரிவின் 4-ம் துணைப் பிரிவு, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரச்சினைகளுக்கு சட்டரீதியான தீர்வுகளை அளிக்கின்றன.

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின் கீழ் செயல்படும் டிரெட்ஸ் (ஜிஸிமீஞிஷி) மின்னணு தளம், சிறு, குறு, தொழில் நிறுவனங்களுக்கு தள்ளுபடிகள் உள்ளிட்ட சலுகைகளை வழங்குகிறது. ரூ 500 கோடி அல்லது அதற்கு மேல் விற்றுமுதல் உள்ள மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் டிரெட்ஸ் தளத்தில் தங்களை இணைத்துக் கொள்ளுமாறு இந்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி





மதுரை: மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக சாலி தளபதி இன்று பொறுப்பேற்று ஆவணத்தில் கையெழுத்து இட்ட போது எடுத்த படம்.



மதுரை: மதுரை மாவட்டம் திருமங்கலம்ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சிமன்ற தலைவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் ஊராட்சி வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் சொரிக்காம்பட்டி கரடிகல் ராயபாளையம் திரளி ஆலம்பட்டி,மேலக்கோட்டை நடுக்கோட்டை செங்கப்படை தும்மக்குண்டுஉள்ளிட்ட 38 ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை தார்சாலை தரம் குறித்து ஆய்வு மேற்கொண்ட ஆணையாளர் ராஜகோபால்



**கோவை ஆகஸ்ட் 04, 2021: கோவை மாநகராட்சியின் 26வது ஆணையராக ராஜகோபால் சுங்கரா பொறுப்பேற்றுக் கொண்டார். ஆணையராக பணியில் அமர்ந்த நாள் முதல் பல்வேறு இடங்களில் முறைகேடுகளை தடுப்பதற்கு ஆய்வில் ஈடுபட்டு அசத்தியுள்ளார். அந்த வகையில் கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 32க்குட்பட்ட சேரன்மா நகர் 4 வது பேருந்து நிறுத்த குறுக்கு சாலை பகுதியில் அமைக்கப்பட்ட தார் சாலையின் தரம் குறித்து மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் ராஜ கோபால் சுன்கரா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

## ஆடிப்பெருக்கை முன்னிட்டு மதுரை மாவட்டம் செக்கானூரணி அருகே உள்ள கிண்ணிமங்கலம் புது மங்கலத்தில் நடைபெற்ற சக்திவாய்ந்த பாண்டி முனீஸ்வரர் கோவில் மகா கும்பாபிஷேகம்

மதுரை 04, 2021: இந்துக்களின் விசேஷ பூஜையயான ஆடி பதினெட்டாம் பெருக்கு முன்னிட்டு பிரசித்தி பெற்ற கோவில்கள் தவிர சிறிய சிறிய கோவில்களில்அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி விசேஷ பூஜைகள் நடைபெற்று வருகிறது.

